Special pay for teaching staff in Colleges

* 32 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Government have accepted in principle that grant of special pay to the teaching staff in colleges who have acquired Ph.D.; and

(b) if so, the number of such staff who will be benefited thereby?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) விதிகளின்படி பிஎச்.டி. பட்டம்பெறத் தேவையில்லாத அரசினர் கல்லூரி ஆசிரியர்களில், பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, 15—11—1973 முதல் ஒரு திங்களுக்கு ரூ. 100 தனிச்சம்பளமாகக் கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) இதனல் சுமார் முப்பது பேர் பலனடைவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த நன்மை தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பிஎச்.டி. பட்டதாரிகளுக்கும் வழங்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனல், பொதுவாக, பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்குத் தனியாக ரூ. 100 கொடுக்க வேண்டுமென்ற தன்மை மற்றைய சம்பளங்களைப்பொறுத்து தனியார் கல்லூரி களிலும் அரசினர் கல்லூரிகளிலும் ஒத்த வகையில் வைத்திருக்கிற காரணத்தால், இதுவும் பொருந்தும் என்று கருதுகிறேன். தனி யாராக இருப்பதால், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

Electro-Chemical Engineering Course

* 33 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether courses in Electro-Chemical Engineering are being conducted in the Government Engineering Colleges in this State; and

(b) if so, the details thereof?

1974 சனவரி 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): இப்பயிற்சி காரைக்குடி அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரியில் மட்டும் இவ்வாண்டு 1—12—1973 முதல் நடத்தப் படுகிறது. ஐந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பயிற்சிக் காலம் ஓராண்டாகும். வகுப்புகள் 1—12—1973-ல் தொடங்கப்பட்டிருக்கின்றன.

THIRU N. DENNIS: Sir, may I know whether it will be extended to other Engineering Colleges and also whether any practical training is given to the students who take this course?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதை அங்கே ஆரம்பிப்பதற்குக் காரணம் 'நாஷனல் லாபரேட்டரி'—தேசிய ஆராய்ச்சிக் கூடம்—இந்திய சர்க்காரின் சார்பாக அமைந்திருப்பதுதான். அது அங்கே அமைந்திருப் பதால் தான் காரைக்குடி பொறியியல் கல்லூரியிலே இப்பிரிவை ஆரம்பிப்பது பொருத்தம் என்று துவங்கப்பட்டிருக்கிறது. ஐந்து என்பதை மேன்மேலும் உயர்த்துவதுபற்றி ஆராயலாம். தேவை ஏற்படுமொனால், வேறுபல கல்லூரிகளிலும் ஆரம்பிக்க இயலுமா என்பதுபற்றி கவனிக்கலாம்.

Grants to Guru Nanak Bhavan

* 34 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the State Government have sanctioned any grant to the Guru Nanak Bhavan in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): ஆம். குருநானக் பவன் சென்னையில் நிறுவ குருநானக் பவன் நிறுவனத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் மான்யமளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது இப்பவன் கட்டுவதற்கான மைய அரசின் பங்கையும் சேர்த்து இவ்வரசு கொடுக்க இருக்கும் ரூபாய் 5 லட்சம் மான்யத்தின் முதல் தவணையாகும்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே மற்ற இன மக்களுக்கு அவர்களுடைய மனையை கட்டுவதற்கு தமிழக சர்க்கார் தாராளமாக நிதி தந்து கொண்டிருக்கிறது.